OS: 509/2018

Date: 17.08.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில்</u>**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்னென்ன சர்வே எண்களில் பட்டா உள்ளது என்றால் 81/1A, 81/1N, 81/1S. இந்த சர்வே எண்கள் அனைத்தும் அருள்மிகு ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் கோவில் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 சர்வே எண்களும் தர்மபுரி ரோட்டின் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 3 ஏர்ஸ் என்பது 7 ½ செண்ட் நிலம் உள்ளது என்றால் அதில் இருப்பது உள்ளது. ச.எண்.81/1Nல் 1 ஏர்ஸ் என்பது 2 ½ செண்ட் நிலம் உள்ளது என்றால் அதில் இருப்பது உள்ளது. ச.எண்.81/1Nல் எவ்வளவு விஸ்திரணம் என வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது எனக்கு நியாபகம் இல்லை. நீதிமன்ற ஆணையாளர் தாவா இடத்திற்கு வந்து பார்வையிட்டு அளந்தபோது எவ்வளவு விஸ்திரணம் என தெரிந்துகொண்டேனா என்றால் நான் அன்றைய தினம் தாவா இடத்திற்கு செல்லவில்லை. நான் நீதிமன்ற ஆணையர் வந்து அளந்தபோது உடன் இருந்ததாக இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அளவுகள் எனக்கு தெரியவில்லை. நீதிமன்ற ஆணையாளர் அளவீடு செய்தபோது ச.எண்.81/1Nல் 1 ½ செண்ட் நிலம்தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பட்டாவில் மேற்படி இடத்திற்கு 2 ½ செண்ட் நிலம் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது, மீதமுள்ள 1 செண்ட் நிலம் பற்றி என்ன யாருக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆதரம்பத்தில் தர்மபுரி சேலம் மெயின்ரோடானது ஒருவழி பாதையாகத்தான் இருந்தது. சேலம் தர்மபுரி சாலையை அகலப்படுத்தி இருவழி பாதையாக மாற்றப்பட்டது என்றால் சரிதான். ரோடு விரிவாக்கத்திற்கும், Drainage வசதிக்காக மேற்படி 1 செண்ட் நிலம் சென்றுவிட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது 1 ½ செண்ட் நிலம் மட்டுமே உள்ளது என்றும், நான் தாவா தாக்கல் செய்தபோது சரியான அளவுகளை வழக்குரையின் சொத்து விவரத்தில் சொல்லப்படவில்லை என்பதால் இந்த தாவாவே

செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தர்மபுரி சேலம் மெயின்ரோட்டில் பெரியமாரியம்மன் கோவிலுக்கு கிழக்குபுறம் ச.எண்.81/1Aல் ஒரு தார் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி தார் சாலை வழியாக செல்லும்போது சித்தி விநாயகர் கோவில், அதன் மண்டபம், புதுத்தெருவில் சுமார் 200 குடியிருப்புகள், பொது கழிப்பிடம், பொது தண்ணீர் தொட்டி, முனியப்பன் கோவில், கடைசியாக சரபங்கா ஆற்றிற்கு சென்றடைகிறது என்றால் சரிதான். மேற்படி ரோட்டினை அங்கு குடியிருப்பவர்கள் கோவிலுக்கு செவ்பவர்கள் அனைவரும் ச.எண்.81/1Aன் வழியாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழில் 24.09.1984 தேதியில் ஜெயபால் என்பவர் கோவிந்தசாமிக்கு 146 சதுரடிகள் ஆவண எண்.1398/84 மூலம் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என உள்ளது என்றால் சரிதான். ச.எண்.81/1Aல் மேற்படி கோவிந்தசாமிக்கு 146 சதுரடிகள் கிரயம் கொடுத்தது குறித்து வழக்கு ஏதேனும் போடப்பட்டதா என்றால் நான் வழக்கு எதுவும் போடவிவ்லலை. மேற்படி கோவிந்தசாமி மீது எனக்கு முன்னாள் இருந்த அறங்காவலர்களோ, தர்மகர்த்தாவோ வழக்கு போட்டுள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது. ச.எண்.81/1Aல் உள்ள ரோடு அமைக்கப்பட்டது குறித்து நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் பெரியவர்கள் காலத்தில் இருந்து அந்த ரோடு இருப்பதால் நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. ச.எண்.81/1Aல் அமைந்துள்ள ரோடானது கோவில் நிலமே அல்ல என்றும், அது தனிநபர் இடம் என்றும், அதனால்தான் அந்த இடததின் ஒரு பகுதி கோவிந்தசாமிக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. ச.எண்.81/1A கோவில் நிலமாக இருந்திருந்தால் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போதே அரசாங்கத்திற்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அவ்வாறு அரசாங்கத்தின் மீது எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி ரோடானது தனி நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மனை நிலமாக மேற்படி இடத்தில் பிரிக்கப்பட்டபோது ச.எண்.81/1A, 81/1N மனை இடத்திற்கான பாதையாக விடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ச.எண்.81/1A, 81/1N என்பது பொதுமக்களின் பயன்பாட்டிற்காக விடப்பட்ட பாதை என்றால் சரியல்ல. ச.எண்.81/1(O) என்பது 3, 4 பிரதிவாதிகளின் மருத்துவமனை என்றால் சரிதான். ச.எண்.81/1S என்பது 3, 4 பிரதிவாதிகளின் சொத்தில் இருந்து தெற்குபுறம் 4வது சொத்தாக உள்ளது என்றால் சரிதான். ச.எண்.81/1S பட்டாவானது கோவில்

பெயரில்தான் இருக்கிறது என்றால் சரிதான். M.S பாலிகிளினிக் என்ற மருத்துவமனையானது தேவாங்கசெட்டியார் திருமண மண்டபத்தை இடித்து கட்டியதற்கு எதிர்புறம் உள்ளது என்றால் சரிதான். அதுவும் தர்மபுரி சேலம் ரோட்டிற்கு கிழபுறத்தில்தான் உள்ளது. வில்லங்க சான்றிதழில் 18.10.1989 K.P.சொக்கலிங்கம், ரேணுகா இருவரும் சேர்ந்து M.S. மேரி வடிவேலுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். இதில் மொத்தம் 407 சதுரடி உள்ளது. M.S. மேரி வடிவேல் மருத்துவமனை கட்டி சுமார் 10 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி M.S. மேரி வடிவேல் மீது ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இதில் இருந்து ச.எண்.81/1S தனிநபர் சொத்து என்றும், கோவில் சொத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சௌடேஷ்வரி அம்மாள் என்ற பெயரில்தான் ச.எண்.81/1S உள்ளது என்றால் சரிதான். ச.எண்.81/1S, 81/1A இரண்டும் தனிநபர்கள் பெயரில்தான் உள்ளது என்றும், ச.எண்.81/1N சொத்தும் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அது கோவிலுக்கு பாத்யிப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. உண்மையில் கோவில் சொத்தாக இருந்தால் அனைவரையும் தரப்பினராக சேர்த்து வழக்கு போட்டிருப்போம் என்றும், அவைகள் தனிநபர்கள் சொத்து என்பதால்தான் எங்கள் தரப்பில் வழக்கு போடவில்லை என்றால் சரியல்ல. தனிநபர்களுக்கான பாதையாகவே ச.எண்.81/1N விடப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையில் உள்ள புகைப்படங்களில் 5, 6, 7 பிரதிவாதிகளின் வீடுகள் அமைந்துள்ளதா என்றால் இல்லை. மேற்படி புகைப்படங்களில் டிரான்ஸ்பார்மர், பொதுக்கிணறு 1, 2 பிரதிவாதிகளின் கடைக்கு பின்னால் உள்ளதா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையாளர் அவரது அறிக்கை மற்றும் புகைப்படத்தில் 5, 6, 7 பிரதிவாதிகள் இடத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மீது போலிஸ் புகார் கொடுத்தேன், அது எந்த தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. நான் குடியிருக்கும் வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் ½ கி.மீ தூரம் இருக்கும். நான் புகார் முதலில் நேரில் கொடுத்தேன், அதை எடுக்கவில்லை என்பதால் தபாலில் அனுப்பினேன். அசல் புகாரினை அனுப்பிவிட்டு நான் கையில் நகலினை மட்டும் வைத்துக்கொண்டோம் என்றால் அது பற்றி கணக்கு எழுதும் தர்மகர்த்தாவிற்குத்தான் தெரியும். வா.சா.ஆ.22 ஆவணத்தில் உள்ள புகாரில் தேதி குறிப்பிட்டு இல்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.22

ஆவணத்தில் அனுப்புநர் என்ற இடத்தில் ஸ்ரீ ராமலிங்க சௌடேஷ்வரி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தா என குறிப்பிட்டு அனுப்பியுள்ளோம். இதே புகாரினை மேட்டூர நீதிமன்றத்தில் இவ்வழக்கு நடந்தபோது இ.ம.எண்.423/2008லும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அச்சு ஆபிஸ் வைத்துள்ளதால் நான் ஒன்றுக்கு அதிகமான புகார்களை பிரிண்ட் எடுத்து வைத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி 2 ஆவணங்களும் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1970ம் வருடத்தில் தண்ணீர் பஞ்சம் வந்ததா என்றால் எனக்கு நியாபகம் இல்லை. அப்போது பொது மக்களுக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக 1ம் பிரதிவாதி இடத்திற்கு பின்புறத்தில் பொதுக்கிணறு வெட்டப்பட்டு பொது மக்களுக்காக தண்ணீர் வேண்டி ஏற்படுத்தப்பட்டது என்றால் கிணறு உள்ளது. தர்மபுரி ரோட்டிற்கு கிழக்குபுறத்தில் இருந்தவர்கள் ரோட்டை கடந்து ச.எண்.81/1N வழியாக வந்து மேற்படி பொது கிணற்றில் இருந்துதான் தண்ணீர் எடுத்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு டால்மியா போர்டில் இருந்து குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி டால்மியா போர்டில் இருந்து குடிநீர் இணைப்புகளானது ச.எண்.81/1N, 81/1A வழியாக தெருக்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1995ல் மேட்டுர் குடிநீர் இணைப்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி குடிநீர் இணைப்புகளானது ச.எண்.81/1N, 81/1A வழியாக தெருக்களுக்கு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ச.எண்.81/1A வழியாக கொடுக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு நாங்கள் எவ்வித ஆட்சேபனைகள் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேட்டுர் நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததுபோது மேட்டுர் நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்து அறிக்கை தாக்கல் செய்ததில் மேற்படி சாக்கடை 4 பெரிய நீளமான கற்கள் வைத்து மூடப்பட்டிருந்தன அதடினயில் கிழக்கிலிருந்து மேற்காக 4 தண்ணீர் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்ததற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. 1995ல் குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தது என்றும், பொது பாதை என்பதால் பதிக்கப்பட்டிருந்தது என்றும், அது கோவில் சொத்து அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20, 21 இரண்டு தந்தி அனுப்பப்பட்டதில் அதில் அனுப்பியவர் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.20, 21 ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

ச.எண்.81/1A வில் பெண்கள் கழிப்பிடமும், ச.எண்.81/1N க்கு பின்னால் ஆண்கள் கழிப்பிடமும் கட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இரண்டு கழிப்பிடத்திற்கும் ஆண்களும் பெண்களும் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். ச.எண்.81/1N ல் உள்ள கழிப்பிடத்திற்கு செல்வதற்கு தாவா பாதை பயன்படுத்தி வந்தார்கள் என்றால் அது காலி இடமாக இருந்ததால் பயன்படுத்தி வந்தார்கள், ஆனால் அங்கு செல்வதற்கு 3 வழிகள் உள்ளது. கோவிலும் கோவிலை சார்ந்த குடியிருப்புகள் பழைய வார்டும் இரண்டும் புதிய வார்டு 3 லும் அமைந்துள்ளது. எங்கள் பகுதியில் உள்ள மக்கள் மேற்படி சர்வே எண்களில் உள்ள பொது கழிப்பிடத்தை பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. தர்மபுரி சேலம் மெயின்ரோட்டில் இருந்து ச.எண்.81/1N வழியாக சென்றால் 80 அடி தூரத்தில் ஒரு மின்மாற்றி உள்ளது என்றால் சரிதான். மேற்படி மின்மாற்றியை பராமரிப்பதற்கு மின்சார வாரியத்தினர் ச.எண்.81/1N வழியாகத்தான் இன்றைய தேதி வரை சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம்/PW1**
**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**